மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**
(ACCREDITED WITH B GRADE BY NAAC)
**Abishekapatti, Tirunelveli – 627 012**
**DR. S. SANTHOSH BABOO**
**REGISTRAR**

MSU/R/UDSI/NEWS ITEM/1406/2018-19/019

Date:14.06.2018

**ரூ.1000 கல்வி உதவி தொகையுடன் சூரிய மின் உற்பத்தி தொழிற்கல்வி ம.சு. பல்கலைக்கழக துணைவேந்தர் அறிவிப்பு**

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழத்தில் புதுப்பிக்கப்படக்கூடிய ஆற்றல்களின் அறிவியல் துறை (Department of Renewable Energy Science) சார்பில் ஒரு வருட முதுகலை மேல் பட்டய படிப்பான "புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் மேலாண்மை தணிக்கை" (PG Diploma in Renewable Energy and Management & Auditing) என்ற புது பட்டய படிப்பை இந்த கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்திகிறோம். நாட்டில் புதுப்பிக்கப்படக்கூடிய ஆற்றல் துறையின் பங்கு இன்றியமையாத மற்றும் வேகமாக வளர்ந்து வரும் துறையாகவும் திகழ்கின்றது. இத்துறையில் படித்து முடித்தவுடன் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறையில் சூரிய, காற்று, உயிரியல் பொருள் முதலிய அமைப்புகளில் சுய தொழில் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிய வாய்ப்புகள் கிடைக்கும்.மேலும் ஆற்றல் தணிக்கையாளர்களாவும் பணி புரியலாம். தற்போது பல்கலைக்கழத்தில் உள்ள 1 மெகா வாட் சூரிய மின் உற்பத்தி நிலையத்தில் பயிற்சி பெறுவார்கள்.

இத்துறையில் சேர விருப்பம் உள்ள மாணவர்கள் இயற்பியல், வேதியியல், கணிதவியல் மற்றும் BE/B.Tech பிரிவில் மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் கம்யூனிகேஷன் துறையில் கணிதத்தை ஒரு பாடமாக பயின்ற இளங்கலை பட்டம் பெற்றவர்கள் இத்துறையில் சேர்ந்து பயில தகுதியுடையவர்கள்.

மேலும் இத்துறையில் சேர்ந்து பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவிதொகையாக மாதம் ரூ.1000 வழங்கப்படும் என பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர்.கி.பாஸ்கர் அறிவித்துள்ளார்.

இத்துறையில் சேர விரும்புவர்கள் **29.06.2018** தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு http://www.msuniv.ac.in/ பல்கலைக்கழக இணையதளத்திலும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை தலைவர் முனைவர்.T.R.ராஜசேகரன் 9442327921 எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் S.சந்தோஷ் பாபு அறிவித்துள்ளார்.

14/6/18

REGISTRAR

14/6/18

Phone: 0462-,2333741, Cell: 9487999687 Fax: 0462-2322973, 0462-2334363
e-mail : registrar@msuniv.ac.in Website : www.msuniv.ac.in